# ஆடும் குமரியின் முக்கடல் மீதே பாடும் வான்புகழ் வள்ளுவன் பாரீர்!

**முத்தமிழ் அறிஞர் கலைஞர் முக்கடல் கூடும் குமரியில் வான்புகழ் வள்ளுவர்க்குச் சிலை நிறுவி 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதையொட்டி டிச. 30, 31 ஆம் தேதிகளில் வெள்ளிவிழா நடைபெறுகிறது. அதோடு 01.01.2025 புத்தாண்டு நாளிலும் மாபெரும் விழா கொண்டாடப்பட இருக்கிறது.**

**கலைஞர் நிறுவிய வள்ளுவர் சிலைக்குப் பேரறிவுச் சிலை" (Statue of Wisdom ) என்று பெயரிட்டுக் கொண்டாடுவோம் எனக் கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து இருக்கிறார்.**



நிலந்தாங்கி இருக்கிற பாறை மீது வள்ளுவன் தம் இரு அடிகளை இருத்தி சிலையாக வானளாவி நிற்கிறான். அதைச் சுற்றிக் குமரிக் கடல் ஆடிக் கொண்டே ஆலோலம் இசைக்கிறாள். பெருங்காற்று வீசிக் கொண்டே இருக்கிறது. ஈரத்துமி (துமி ஒரு துளியில் ஊசி முனையளவு) அலைகளின் வழி உடலைச் சிலிர்க்க வைக்கிறது. இதனூடே வெப்பச் சலனம் இதம் தருகிறது; பதமாக!

இயற்கை தந்த ஐந்தினுள் நின்று 'ஆறாய்' சிலையாக உலகுக்குத் தெரிகிறான் - வள்ளுவன் அதுதான் பேரறிவு. ஆங்கே வள்ளுவன் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பாடிக் கொண்டே இருக்கிறான்.

'ஆதியில் இருந்ததில்லை ஆரிய பொய்நெறி; ஓதும் தமிழ்காட்டுவதே மெய்ந்நெறி' என்பதை வள்ளுவன் அறிவான். அதனை அடையாளப்படுத்தி பேரறிவு சிலையை நாட்டியவர்கு ஓராயிரம் முறை தலைக்கு மேலே கை கூப்பி வணக்கம் கூறி நன்றியோடு அம் மாமனிதரை இந்த நேரத்தில் நினைவு கூர்வோம்.

**தெள்ளு தமிழ்நடை**
**சின்னஞ்சிறிய இரண்டடிகள்**
**அள்ளுந் தோறுஞ் சுவை**
**உள்ளும் தோறும் உணர்வாகும் வண்ணம்**
**கொள்ளும் அறம், பொருள்**
**இன்பம் அனைத்தும் கொடுத்த திரு**
**வள்ளுவனைப் பெற்ற**
**தாற் பெற்றதே புகழ் வையகமே!**

**வெல்லாத தில்லை**
**திருவள்ளுவன் வாய் விளைத்தவற்றுள்**
**பொல்லாத தில்லை**
**புரை தீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்**
**செல்லாத தில்லை,**
**பொது மறையான திருக்குறளில்**
**இல்லாத தில்லை**
**இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே!**

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வள்ளுவன் வாய் முத்துகளைப் பற்றி ஐந்து கட்டளைக் கலித்துறைப் பாடல்களை எழுதியிருப்பார். அவற்றில் இரண்டினை மேலே தந்து இருக்கின்றோம். இதில்தான் அவர் எத்தனை சுவைகளை உள்ளடக்கமாகச் சொல்கிறார். குழந்தையைக் கொஞ்சும் போதுகூட 'திருக்குறளிலிருந்து ஒரு சொல் எடுத்து இயம்பி ஆடிக்காட்ட மாட்டாயா' என்று இசைத் தமிழிலே கொஞ்சுவார்.

**திருக்குறளிலே - வள்ளுவத்திலே - வள்ளுவனிடத்திலே - வாழ்வின் சுவை புதைந்து கிடக்கிறது. தமிழர்க்குக் கிடைத்த அந்த மணற்கேணி உலகப் பொதுப் மறை. அதில் சாதி இல்லை; மதம் இல்லை; கடவுளுக்கு உருவமில்லை. அக்கொள்கைகளை மண்டைச் சுரப்பில் நிறுத்த வள்ளுவனின் திருக்குறள் அனைத்துலக மனிதனை நோக்கி அறைகூவுகிறது; அழைக்கிறது.**

**நமது கழகத் தலைவர் ஸ்டாலின் கூறியதுபோல் இந்த முக்கடல் வள்ளுவன் சிலை அனைத்துலக மனிதனை நோக்கி திருக்குறள் ஓதுகிறது. ஏனெனில் இது பேரறிவுச் சிலை (Statue of Wisdom ) - ஆகவே பேசுகிறது. திருக்குறளை அன்றாடம் ஓதுங்கள் என்று நினைவுபடுத்துகிறது.**

சிலைபேசாது. இந்தச் சிலையின் அடையாளம் திருக்குறள். ஆகவே பேசுகிறது. திருக்குறளாய் பேசுகிறது. வீட்டுக்குப் போய் திருக்குறளைப் படியுங்கள். ஒவ்வொரு குறளாய் ஓதுங்கள் என்கிறது பேரறிவுச் சிலை. நாமும் இதை வற்புறுத்திச் சொல்கின்றோம்.

திருக்குறளின் உள்ளடக்கமும் அதன் ஆழ, அகல, உயரமும் தெரிய வேண்டுமானால் நாள் தோறும் நீங்களாகவே திருக்குறள் ஓதுங்கள். முதலில் ஒரு குறள் படியுங்கள். அதன் அமைப்பைப் பாருங்கள். ஒவ்வொரு சொல்லாகப் படியுங்கள் அதன் பொருத்தப் பாட்டை நோக்குங்கள்.

ஒரு குறளின் கருத்துரையை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கான சரியான தெளிவுரையைத் தேர்ந்தெடுங்கள். முதலில் இந்தப் பயிற்சி நடக்கட்டும். அந்தக் குறளைப் பற்றியவிளக்கவுரை- ஆய்வுரை- இலக்கணக் குறிப்பு என மேலே மேலே போங்கள்.

தமிழ் மறையான திருக்குறளை வடமொழி மறையோடும் உபநிஷதங்களோடும் கதையாடல்களோடும் மநுவோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போதுதான் குமரியில் வைக்கப்பட்டுள்ள வள்ளுவன் சிலையின் பெருமைத் தெரியும். அதன் உயரம் புரியும். முத்தமிழ் அறிஞர் ஏன் நிறுவினார் என்று விளங்கும்.



## க.திருநாவுக்கரசு

திராவிட இயக்க ஆய்வாளர்

வள்ளுவன் செய்திருக்குறளை மறுவறக் கற்க வேண்டும் என்கிறார் மனோன்மணியம் சுந்தரனார். திருக்குறளின் அமைப்பு அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுப்பு. ஆம்; முப்பால்! முப்பிரிவு!!

**அறத்துப்பால் 4 இயல்; பொருட்பால் 3 இயல்; இன்பத்துப்பால் 2 இயல் - ஆக 9 இயல்கள். முறையாகச் சொல்வதானால் அறத்துப் பாலில் 380 குறட்பாக்கள், பொருட்பாலில் 700 குறட்பாக்கள்; இன்பத்துப் பாலில் 250 - ஆக 133 அதிகாரங்கள் - 1330 குறட்பாக்கள், 14,000 சொற்கள், 42194 எழுத்துகள் என கட்டமைக்கப்பட்டது திருக்குறள். இதன் 'உள்ளீடு' அணுவைத் துளைக்கும். கடுகைத் துளைக்கும். ஏழ் கடலை உள்ளே புகுத்தும்.**

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று பேசுகிறதேயொழிய 'வீடு' பேற்றைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வீடு என்பது மேலுலகம் பற்றியது. 'சிந்தையும் யாக்கையும் செல்லாவிடத்து' என்று பரிமேலழகர் சிறப்பித்து எழுதி அதனால் வள்ளுவன் வீடு பேற்றை எழுதவில்லை என்பார். இதைவிட சான்று என்ன வேண்டும்?

திருக்குறளுக்கு தெளிவுரை, கருத்துரை, அகலவுரை, விளக்கவுரை, ஆய்வுரை என இதுவரை 400க்கும் மேற்பட்ட உரைநூல்கள் வெளிவந்து இருக்கின்றன. திருக்குறள் ஆங்கிலத்தில் ஜி.யு. போப் முதல் வன்மீகநாதன் வரை மொழி பெயர்த்து இருக்கிறார்கள். அது ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது.

அனைத்துலக மனிதனை நோக்கி அறைகூவல் விடுக்கும் ஆற்றலுள்ள திருக்குறளைப் படைத்து அடையாளமாக இருக்கிற குமரி கடலாடும் வள்ளுவனை 'பேரறிவுச் சிலை' எனக் கூறியுள்ளார் மு.க.ஸ்டாலின்.



ஆங்கிலத்தில் 'Statue of Wisdom' என்று குறிப்பிட்டு இருக்கிறார் என்று மேலே கூறியிருக்கிறோம்.

எவ்வளவு பொருத்தமாக ஸ்டாலின் 'பேரறிவுச் சிலை' என்று வள்ளுவனைக் கூறியிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது வள்ளுவத்தினுள்ளே நம் அறிவு ஒரு பாய்ச்சலை ஏற்படுத்திச் சுற்றுலா செல்கிறது.

அறிவு - பேரறிவு - பேரறிவு பெரிய அறிவு என்று விரிந்து பொருள் தருமா என்றால் தராது. அப்படிப் பொருள் கொள்வதில்லை. பெருமைக்குரிய அறிவு என்றே அதனைப் பொருள் கொள்ள வேண்டும். சிறந்த அறிவு என்று சொல்லலாம்.

ஆங்கிலத்தில் உள்ள Wisdom-ஐ ஞானம் எனும் தமிழ்ச் சொல்லைக் கொண்டு அறிவின் அடுத்த உயர் நிலையைச் சொல்வர். ஆனால் வள்ளுவனோ தமது குறட்பாலில் நான்கு இடங்களில் 'ஞாலத்தைக்' காட்டியவன். 'ஞானம்' எனும் சொல்லை எங்கும் பெய்யக் காணோம்.

வள்ளுவன் நமக்குப் பத்து உடைமைகளைத் தந்து இருக்கிறான். அதிலொன்று அறிவுடைமை. 43 ஆவது அதிகாரம் முழுமையும் அறிவின் மாட்சிப் பேசப்படுகிறது. அதில், 'அஃகி அகன்ற அறிவு' (குறள் -175) புலப்படுவதை அறியலாம்.

வள்ளுவன் காட்டும் இறைவன் வடிவம் இல்லாதவன். மதம் சாராதவன். அவனை நமக்கு 'வாலறிவன்' (குறள்-3) என்றே நூலின் தொடக்கத்திலேயே வள்ளுவன் அறிமுகப்படுத்தி விடுகிறான்.

மனிதனுக்கு ஆறாம் அறிவு மட்டுமில்லை. ஆறாவதாக, ஐந்தினையும் (விண், மண், தீ, நீர், காற்று) கடந்து ஒரு நிலைத் தேவைப்படுகிறது. அதனையே வள்ளுவன் 'வாலறிவன்' என்று கூறுகிறான்.

ஆகவே வள்ளுவன் தான் 'தலைவராக'க் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்குக் காட்சி அளிக்கிறார். அவனைத் 'தமிழ் இறைவனார்' என்று விதந்து ஓதுகிறார். அவர் சில குறட்பாளுக்கு உரையும் வரைந்தார்.

நமது தலைவர் மு.க.ஸ்டாலினுக்கோ அறிவுத் தளத்தில் நிற்கிற வள்ளுவன் பேரறிவுச் சிலையாக - Wisdom ஆக காட்சி அளிக்கிறான். அதை நாட்டு மக்களுக்கும் அறிவித்துவிட்டார். இந்த மெய்யை நாம் விளக்க வேண்டாமா? விளங்கிக் கொள்ள வேண்டாமா?

வள்ளுவனின் அறத்திலும் பொருளிலும் விரவி, பரந்து நிற்கும் 'அறிவு' எனும் சொல் எதிர்மறை நிலையில் இன்பத்துப் பாலில் 'அறிவதொன்று அன்று' (குறள் 1255) என்கிற ஓர் இடத்தில் மட்டும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதில் காதல் நோய் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியது இல்லை என்று கூறப்பட்டு இருக்கிறது.

வள்ளுவனின் அறிவின் பரப்பை பேரறிவின் வீச்சை எல்லாக் கருத்துகளிலும் புதுப்புதுப் புள்ளிகளோடு காலந்தோறும் காணலாம். அறத்தையும் பொருளையும் நாம் பருந்து பார்வையாகத் தான் இங்கே பார்க்கின்றோம். விமானத்தில் அமர்ந்து நாட்டைப் பார்க்கிறபோது ஊர் தெரிவது போல முதல் கட்டத்தில் விளங்கிக் கொள்ள இயலாததாய் இருக்கும், அருகே சென்றால் துலக்கமாக ஆயிரம் எண்ணங்கள் விரியும்.

அறிவு (குறள் 355), அறிவு (குறள் 358), அறிவு (குறள் 372), அறிவு (குறள் 376), அறிவுடையார் (குறள் 404), அறிவினார் (குறள்429), அறிவுடையார் கேண்மை (குறள் 441), அறிவு (குறள்452), அறிவு (குறள் 454), அறிவு (குறள் 513), மதிநுட்பம்(குறள் 636), அறிவு (குறள் 682), அறிவு (குறள் 684), அறிவு தாம் தூது(குறள்686), அறிவு இன்மை (குறள் 841), அறிவிலான்(குறள் 842), அறிவிலார்(குறள் 843), அறிவிலான் செய்யும் (குறள்847) இன்ன அறிவினவர் (குறள் 857), அறிவிலா (குறள்869), மாண்ட அறிவினவர்( குறள்915), ஆயும் அறிவினர்(குறள் 918), அரம் போலும் கூர்மையரேனும் (குறள் 997), ஆன்ற அறிவும் (குறள் 1022), நன்று அறிவாரின் (குறள் 1072)-இவையெல்லாம் அறத்திலும் பொருளிலும் அறிவு தெரிந்து உறைபவை. 'அறிவு' கரந்துறைபவையை எவை என குறளை ஓத ஓத அறியலாம்.

இதனைத்தான் பேரறிவு என்றார் மு.க.ஸ்டாலின். அறிவைத் தெரிந்து உரைத்தும் கரந்துரை செய்தும் வாழ்வியலைக் கற்பித்த வள்ளுவன் பேரறிவைப் பற்றி ஏதாவது சொல்லி இருக்கிறாரா?

சொல்லி இருக்கிறான். எங்கே? பேரறிவாளன் திரு (குறள் 215) என்று ஒப்புரவு அதிகாரத்திலே கூறியிருக்கிறான். பேரறிவு எடையவனின் திரு அது. ஒப்புரவு அதிகாரத்திலே நவிலப்பட்டு உள்ளது. ஒப்புரவு என்பது பொது நலம் அறிதல்; உலகப் பாங்கு. அங்கே - வள்ளுவத்திலே பேரறிவு வருகிறது.

'பேரறிவாளன் திரு'வ எந்தவிடத்திலே வள்ளுவன் எடுத்து வைக்கிறான்.

**ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

**கருத்து:** உலகோரால் விரும்பப்படும் சிறந்த அறிவாளன் செல்வம் ஊருணி நீரால் நிறைந்தது போன்றது.

இந்த 'ஒப்புரவு' அதிகாரம் முழுமையும் பேரறிவு பேசுகிறது. பேரறிவை 'ஞானம்' என்று சொல்லலாம். எழுதலாம். தவறில்லை. ஞானமிங்கே பல இடங்களில் சமய ஞானம் ஆகிவிடுகிறது. அது மெய்ஞானம் என்றும் பேசப்படுகிறது.

சமயிகள் மட்டுமில்லை, மார்க்சியர்களும் மெய்ஞானத்தைப் பேசி இருக்கிறார்கள்.

பிரெஞ்சு நாட்டின் மார்க்சிய அறிஞரான ஜார்ஜ் புலிட்சரின் நூலொன்றைத் தமிழில் மொழி பெயர்த்த அறிஞர் ஆர்.கே. கண்ணன், அதற்கு 'மார்க்சிய மெய்ஞானம்' என்றே பெயர் வைத்தார். இப்படி 'ஞானம்' எனும் சொல் பயன்படுகிறது.

ஆகவே ஞானம் பரஞானம், உயர் ஞானமாகி வானளாவி நின்ற போது Wisdom -ஐ இங்கே 'பேரறிவு' ஆக்கி எம்மை மலைக்க வைத்தார் நம் தலைவர் மு.க.ஸ்டாலின்! சிந்திக்கவும் வைத்தார்.

**வள்ளுவன் குமரிமுனையிலே வான் நோக்கிப் பார்த்து பேரறிவை நிலை நாட்ட உலக மனிதனை நோக்கி அறை கூவல் விட்டு அழைக்கின்றான்.**

**அந்தப் பேரறிவு சமய ஞானமில்லை. மற்ற பொருளை உள்ளடக்கியதாக இருக்கிறது. நேரடிப் பொருளுக்கு வரவேண்டும். 'பேரறிவாளன் திரு'வில் உள்ள பொருள் 'சிறந்த அறிவாளன்' என்பது தான்!இந்தச் 'சிறந்த அறிவாளன்' தான்! நம் வள்ளுவன்! அவனைத் தமிழ்நாடு உலகுக்கு தந்து இருக்கிறது. அதற்குத்தான் வெள்ளிவிழா!**

ஆடும் குமரியின் முக்கடல் மீதே - பாடும் வான்புகழ் வள்ளுவன் மெய்யுணர்ந்தவன். ஆகவே கட்டமைப்புக்கு புதுவரிக் காட்டியவன். அவனின் பேரறிவு என்பது பகுத்தறிவு, மெய்யறிவு மூதறிவு, மு.சண்முகம் பிள்ளை அகராதியும் பேரறிவுக்கு தருகிற பொருளும் இதுதான்!

**பேரறிவு வளர்க!**
**வள்ளுவம் வாழ்க!**

---

**உள்நாட்டு வளர்ச்சி விகிதம் எந்த நாட்டில் அதிகரிக்கிறதோ அங்குதான் நல்லாட்சி நடைபெறுவதாக அர்த்தம்!**

# மோடி ஆட்சியில் வீழ்ச்சி விகிதமே அதிகரிப்பு!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் குமுறல்!


சென்னை, டிச. 31-

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு உள்நாட்டு வளர்ச்சி விகிதத்தில் தோல்வி அடைந்து விட்டது. மோடி கூறிய விதத்தில் உள்நாட்டு வளர்ச்சி விகிதம் எந்த நாட்டில் அதிகரிக்கிறதோ அங்குதான் நல்லாட்சி நடைபெறுகிறது. என்று அர்த்தம் என்று கூறினார். ஆனால் மோடி ஆட்சியில் வீழ்ச்சி விகிதமே அதிகரித்துள்ளது. இதற்கு மோடி என்ன கூறப் போகிறார் என 'தீக்கதிர்' நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதோடு, கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வால் மக்களின் வாழ்க்கை நிலை மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாக குறைந்துள்ளது. இந்த புள்ளி விவரம் கூட உண்மையான பொரு ளாதார நிலையை பிரதிபலிக்கவில்லை.

உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. பருப்பு வகைகள், காய்கறி கள், பால் பொருட்கள் என அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்துள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் வாங்கும் சக்தி வெகுவாக குறைந்து ள்ளது. ரிசர்வ் வங்கியின் வட்டி விகித உயர்வால் வீட்டுக்கடன், வாகனக்கடன் போன்றவை



தீக்கதிர்
2024 டிச.30 திங்கட்கிழமை
**பணவீக்கம் உயர்வும் மக்கள் வாழ்வின் வீழ்ச்சியும்!**
மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக கூட்டணி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதோடு, கட்டுக் கடங்காத விலைவாசி உயர்வால் மக்களின் வாழ்க்கை நிலை மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாக குறைந்துள்ளது. இந்த புள்ளிவிவரம் கூட உண்மையான பொருளாதார நிலையை பிரதிபலிக்கவில்லை.
உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து

அதிகரித்து சாமானிய மக்களின் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது.

நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவ ரங்களின்படி 2023-24 முதல் அரையாண்டில் ஜிடிபி வளர்ச்சி 8.1சதவீதம் என்று கூறப்பட்டாலும், இது தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசின் செல வினங்களால் ஏற்பட்ட தற்காலிக உயர்வே ஆகும்.

உண்மையில் தனியார் துறை முதலீடுகள் வெகுவாக குறைந்துள்ளன. வேலையின்மை உச்சத்தில் உள்ளது. விவசாய துறையில் வளர்ச்சி இல்லை. சிறு, குறு தொழில்கள் பெருமளவில் மூடப்பட்டுள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபம் மட்டுமே உயர்ந்துள்ளது. பங்குச் சந்தை யின் உயர்வு பொய்யான பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது.

மோடி அரசு இந்த ஆண்டு ஜூலையில் அறி வித்த முழு பட்ஜெட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கம், நடுத்தர வர்க்கத்திற்கான திட்டங்கள் என்ற பெயரில் வரி விலக்குகள் அறிவித்தாலும், அவை பணவீக்கத்தை கட்டுப்படுத்தவோ, நுகர் வோர் செலவினத்தை ஊக்குவிக்கவோ போதுமானதாக இல்லை. உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரூ.11.11 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும் என்ற அறிவிப்பும் வெற்று வாக்குறுதியாகவே உள்ளது.

வரும் 2025 ஆம் ஆண்டில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என்பதே நிதி நிபுணர்களின் கணிப்பு. உணவுப் பொருட்களின் விலை உயர்வு தொடரும் நிலையில் ரிசர்வ் வங்கி வட்டி விகி தத்தை குறைக்க வாய்ப்பில்லை. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலால் ஏற்படக்கூடிய உலகளாவிய பொருளாதார அதிர்வுகளும் இந்தியப் பொருளாதாரத்தை பாதிக்கும்.

இந்த நிலையில் பணவீக்கத்தை கட்டுப்படுத் தவும், பொருளாதாரத்தை மீட்டெடு க்கவும் மக்கள் நலன் சார்ந்த மாற்று பொருளாதாரக் கொள்கைகள் அவசியமாகிறது. கார்ப்பரேட் ஆதரவு கொள் கைகளை கைவிட்டு, பொதுத்துறையை வலுப்படுத்தி, விவசாயம் மற்றும் சிறு தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கைகளை கொண்டு வருவதே இதற்கான தீர்வாக இருக்க முடியும்.

இவ்வாறு 'தீக்கதிர்' நாளேடு தனது குமுறலை வெளிப்படுத்தியுள்ளது.

---



இராணிப்பேட்டைமாவட்டம், வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற 573 மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்ட விரிவாக்கம் விழாவை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டைஆர். காந்தி தொடங்கி வைத்து, மாணவிகளுக்கு வங்கி கணக்கு அட்டைகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்டக் கழக அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட், துணை தலைவர் ராதாகிருஷ்ணன், வாலாஜா நகர மன்ற தலைவர் ஹரிணி தில்லை, ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், சோளிங்கர் நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி அசோகன், அரக்கோணம் ஒன்றிய குழு தலைவர் நிர்மலா சவுந்தர், மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.